## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

## முதலாம் வருட இரண்டாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு - 2011/2012 (பெப்ரவரி - 2014)

# CC 1203 MANAGEMENT AND ENTREPRENEURSHIP

ஏதேனும் நான்கு (04) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.

நேரம் - 2 மணித்தியாலங்கள்

---

01. a) "முகாமைத்துவம் என்பது ஒரு நிறுவனத்தை சிறப்புற நடாத்த தேவைப்படும் விடயமாகக் காணப்படுகின்றது". முகாமைத்துவம் என்றால் என்ன என குறிப்பிடுவதுடன் முகாமைத்துவமானது இன்று எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் விளக்குக.

(15 புள்ளிகள்)

b) "வெவ்வேறு மட்டங்களைச் சேர்ந்த முகாமையாளர்களுக்கு வேண்டப்படும் தேர்ச்சித் திறன்களின் அளவானது வேறுபடுகின்றது". இக்கூற்றை விளக்குக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

02. a) வணிகச் சூழல் என்றால் என்ன? அதன் வகைகளில் ஏதேனும் ஒன்றினைக் குறித்து விளக்குக.

(15 புள்ளிகள்)

b) "நிறுவனமொன்றின் சூழல் காரணிகள் ஒரு நிறுவனத்திற்கு சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ அமையலாம். இதனை ஆய்வு செய்ய SWOT ஆய்வானது பாரிய பங்கு வகிக்கின்றது". இக் கூற்றினை உதாரணத்துடன் ஆராய்க.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

03. a) ஹென்றி பயோலின் முகாமைத்துவம் தொடர்பான பதினான்கு தத்துவங்களில் ஏதேனும் ஐந்து (05) தத்துவங்களைக் குறித்து விளக்குக.

(15 புள்ளிகள்)

b) "ஜப்பானிய நிறுவனங்களின் சிறந்த செயற்பாட்டிற்கு காரணம் அதனது சிறந்த முகாமைத்துவமே ஆகும்". ஜப்பானிய முகாமைத்துவத்தினைக் குறித்து சுருக்கமாக ஆராய்க.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

04. a) கட்டுப்படுத்தல் என்றால் என்ன எனக் குறிப்பிடுவதுடன், கட்டுப்படுத்தலின் முக்கியத்துவத்தையும் குறித்து ஆராய்க.

(15 புள்ளிகள்)

b) "நிறுவனங்கள் தமது விருப்பத்திற்கேற்ப கட்டுப்படுத்தல் முறைகளைத் தேர்ந்தெடுக்க முடியும்". அத்தகைய கட்டுப்படுத்தல் வகைகளைக் குறித்து விளக்குக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

05. a) சிறந்த தலைமைத்துவத்தினைக் கொண்டுள்ள முகாமையாளரிடம் காணப்படும் பண்புகளைக் குறித்து ஆராய்க.

(15 புள்ளிகள்)

b) சிறந்த தலைவர் ஒருவரிடம் காணப்பட வேண்டிய வலுக்களை (Power) அடையாளம் கண்டு விளக்குக. (10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

06. a) முயற்சியாண்மை எனும் பதத்தை வரையறுத்து, ஒரு வெற்றிகரமான முயற்சியாளருக்கு இருக்க வேண்டிய தகைமைகளை குறித்து விளக்குக.

(15 புள்ளிகள்)

b) ஒரு முயற்சியாளர் எதிர்நோக்கும் ஏதேனும் ஐந்து (05) வகையான தடைகளை குறிப்பிட்டு அதற்கான பரிந்துரைகளையும் விளக்குக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)